## வட்டார வழக்கு

தமிழ் மொழி ஒன்றேயாயினும் வட்டாரங்களுக்கென்று சிறப்பான தனி மொழி வழக்குகள் இருக்கின்றன. சென்னைத்தமிழ், கோவைத்தமிழ், நெல்லைத்தமிழ், மதுரைத்தமிழ் குமரித்தமிழ் என்றெல்லாம் வேறுபட்டு தமிழ் வழங்குகின்றது. அந்தந்த வட்டார வழக்குகளை படைப்பு இலக்கியங்களில் தமிழ் எழுத்தாளர்கள் கையாண்டு உள்ளனர். சிறுகதைகளிலும், புதினங்களிலும் வட்டார மொழி இடம்பெற்று வட்டார சிறுகதை, வட்டார புதினம், என்று பகுத்து பேசக்கூடிய நிலை ஏற்பட்டு வட்டார இலக்கியம் என்ற பகுப்பு உருவாயிற்று.

புதுமைப்பித்தன் நெல்லை தமிழிலும், சண்முகசுந்தரம் கோவை தமிழிலும், ஜெயகாந்தன் சென்னை தமிழிலும், தோப்பில் முகமது மீரான் குமரி தமிழிலும், எழுதி புகழ்பெற்றனர். கி.ராஜநாராயணன் கோவில்பட்டி வட்டார தமிழைப் பயன்படுத்தி இலக்கியங்களை படைத்தார். தம்முடைய வட்டார எழுத்திற்கு அவர் **கரிசல் இலக்கியம்** என்று பெயரிட்டார்.

| கரிசல் வழக்குகள் | பொருள் |
|---|---|
| 1. பாச்சல் | பாத்தி |
| 2. பதனம் | கவனம் |
| 3. நீத்து பாகம் | மேல் கஞ்சி |
| 4. கடிச்சு குடித்தல் | வாய் வைத்து குடித்தல் |
| 5. மகுலி | சோற்று கஞ்சி |
| 6. வரத்து காரன் | புதியவன் |
| 7. சடைத்துப்புளித்து | சலிப்பு |
| 8. அலுக்கம் | அழுத்தம் (அணுக்கம்) |
| 9. தொலைவட்டையில் | தொலைவில் |
| 10. கணையம் | நிறைவானது |
| 11. எச்சௌவந்தவன் | ஏழை எளியவன் |
| 12. கீழத்தார் | புன்செய் நிலத்தின் ஒரு பகுதி |
| 13. கிராமுனுசு | கிராம நிர்வாக அலுவலர் |
| 14. கொடவாங்கல் | கொடுக்கல் வாங்கல் |
| 15. திருணை | திண்ணை |
| 16. தெகஞ்சத | முடிந்ததை |
| 17. பிஞ்சை | புன்செய் |
| 18. ரோசி | உரசுதல் |
| 19. வாந்தக்கமாக | இணக்கமாக |
| 20. வெதப் பெட்டி | விதைப்பற்றி |
| 21. வெல்லங்காட்டி | விடியற்காலை |
| 22. வேண்டாற | வேண்டாத |
| 23. திருகை | மாவு அரைக்கும் கல் |
| 24. குறுக்கம் | சிறிய நிலப்பரப்பு |
| 25. கடகம் | ஓலை பெட்டி |

| குமரித்தமிழ் | பொருள் |
|---|---|
| 1. ஏச்சு | திட்டுதல் |
| 2. கடவு | படித்துறை |
| 3. கன்னியார் கோணம் | ஒரு வயல்காட்டின் பெயர் |
| 4. பாவாத்து | துணி நெய்ய வேண்டிய நூலுக்கு பசை சேர்ப்பது |
| 5. சுள்ளைக்கு உள்ளிருந்து | செங்கல் நெருப்பு கள்ளைக்கு உள்ளிருந்து |
| 6. அடிபற்றி இருக்கும் | அடித்தரை தெரியும்படி |
| 7. வேசாடையாக | சற்று கோபமாக |
| 8. அமானிதம் | பாதுகாக்கப்பட வேண்டிய விஷயம் |
| 9. ஏலாவிலிருந்து | பெரிய வயலில் இருந்து |
| 10. முக்கால் மூண்டானி | ஓரளவு |
| 11. புன்ன மூட்டடி | புன்னை மரத்தின் நிழல் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in